# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1854 - 2014 මාර්තු මස 14 වැනි සිකුරාදා - 2014.03.14

*1854 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 300 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 301 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, *அதாவது 2014, ஏப்பிறல் மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, மார்ச்சு மாதம் 21 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி - மட்டக்களப்பு மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2014, சித்திரை மாதம் 15 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2014, மாசி 24.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| மட்டக்களப்பு | கோரளைப்பற்று மேற்கு- ஓட்டமாவடி | ஏறாவூர் கோரளைப்பற்று ஓட்டமாவடி பிரிவில் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், மட்டக்களப்பு. |

3-332

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - அநுராதபுரம் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2014, சித்திரை மாதம் 15 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2014, மாசி 25.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| அநுராதபுரம் | திரப்பனை | ஹுருலுபலாத பிரிவில் விவாக (பொது/கண்டிய) பதிவாளர் பதவி மற்றும் திரப்பனை பிரிவின் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், அநுராதபுரம். |

3-374

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**சுகாதார அமைச்சு**

துணை மருத்துவ துறையின் கீழ் குடும்ப நல சேவை உத்தியோகத்தர்கள் பயிற்சிக்கான பயிலுனர்கள் ஆட்சேர்ப்பு - 2014

சுகாதார அமைச்சில் துணை மருத்துவ துறையின் கீழ் கீழே குறித்த தொழிற்பயிற்சிக்காக தகைமைகளையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| குறியீட்டு இல. | தொழிற்பயிற்சியின் பெயர் | பயிற்சிக்கான காலம் | தொழிற்பயிற்சி வழங்கப்படும் மொழி |
|---|---|---|---|
| 1 | குடும்ப நல உத்தியோகத்தர் | 1 1/2 வருடங்கள் (06 மாதங்கள் வெளிக்களப் பயிற்சி) | சிங்களம், தமிழ் |

1. க.பொ.த. (உ.த) இல் பெற்றுக் கொண்ட Z புள்ளிக்கமைய தயாரிக்கப்பட்ட முதன்மை அட்டவணை அடிப்படையில் 30 வீதமும் மாகாண ரீதியில் தகைமை அடிப்படையில் 70 வீதமும் தெரிவு செய்யப்படுவர். பயிற்சிக்காக மாகாணங்களில் இருந்து தெரிவு செய்யப்படும் பயிலுனர்களின் எண்ணிக்கை அம்மாகாணத்திலுள்ள சுகாதார அமைச்சின் கீழ் உள்ள மற்றும் மாகாணங்களுக்குரிய வைத்தியசாலைகள் தாபனங்கள் என்பவற்றின் வெற்றிடங்களின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர்.

பயிற்சிக்காக க.பொ.த. (உ.த) Z புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு பல வருடங்களுக்குரிய உ.த. பரீட்சையில் சித்தியடைந்தவர்களிடமிருந்து (இங்கு பந்தி 4 (அ) விற்கமைய) விண்ணப்பங்கள் கோரப்பட்ட சந்தர்ப்பத்தில் பயிற்சிக்குத் தேவையான முழுப்

பயிலுனர்களின் எண்ணிக்கையைத் தெரிவு செய்வது அனைத்து வருடங்களிலும் தகைமைகள் உள்ள மொத்த விண்ணப்பதாரிகளின் மொத்தத் தொகையில் அந்தந்த வருடத்திற்கு தகைமையுள்ள விண்ணப்பதாரிகளின் சதவீதத்தினாலாகும்.

2. இது ஒரு முழுநேரப் பயிற்சிநெறி என்பதால் வார நாட்கள் ஐந்துடன் சனிக்கிழமை காலை நேரத்தில் பல்கலைக்கழகம் அல்லது சுகாதார அமைச்சின் கீழ் அல்லது வேறு அரசாங்கத் தாபனங்களில் அல்லது வேறு எந்த முழு நேரப்பயிற்சி நெறியில் உள்ள மாணவர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியாது. யாராவது அவ்வாறு விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில் அல்லது அது வெளிப்படுத்துமிடத்து பயிற்சிநெறி/பதவியிலிருந்து நீக்கப்பட்டு அதுவரை அரசாங்கத்தால் அவருக்காக செலவு செய்த அனைத்து செலவுகளும் அவரிடமிருந்து அறவிடப்படும். பல்கலைக்கழகத்தில் முழு நேரப் பயிற்சி நெறியில் உள்ள ஒருவர் இதற்கு விண்ணப்பிப்பாராயின் அதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள முறையில் செயற்பட வேண்டும். சுகாதார அமைச்சின் கீழ் முழு நேரப் பயிற்சி நெறியில் பதிவு செய்தவர்கள் விண்ணப்பிக்க முடியாது.

2.1 எந்தத் தினத்திலாவது நீங்கள் எந்தவொரு பல்கலைக்கழகத்தில் அல்லது அரச தாபனத்தில் முழு நேரப் பயிற்சி நெறிக்கு பதிவு செய்திருப்பின் 15.04.2014 ஆந் திகதியாகும்போது அதை இரத்துச் செய்தல் வேண்டும். நீங்கள் பல்கலைக்கழகத்தில் பதிவுசெய்யப்பட்டு விரிவுரைகளுக்குச் செல்லாது இருப்பினும் நீங்கள் பல்கலைக்கழக மாணவராகவே கருதப்படுவீர்கள் என்பதால் அவ்வாறான விண்ணப்பதாரர்கள் தமது பெயரை பதவியிலிருந்து நீக்கிக் கொள்ள வேண்டும். தேவையான சந்தர்ப்பத்தில் அதை உறுதி செய்வதற்கும் போதுமான ஆவணங்களை நீங்கள் சமர்ப்பிக்கக்கூடியதாக இருக்க வேண்டும்.

2.2 நீங்கள் 2014.04.15 ஆந் திகதியில் பல்கலைக்கழகத்தில் அல்லது சுகாதார அமைச்சின் கீழ் நடைபெறும் பயிற்சி நெறிக்கு பதிவு செய்யாதவரும் குறித்த பயிற்சி நெறிக்கு பயிலுனராக இணைத்துக் கொள்ளும் நேர்முகப் பரீட்சை நடைபெறும் திகதியாகும்போது பதிவு செய்யவிருப்பின் அவர் இந்தப் பயிற்சி நெறிக்குத் தகைமையற்றவராவார்.

2.3 நீங்கள் ஏதாவதொரு பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றிருப்பின் அந்தப் பட்டம் செல்லுபடியாகும் திகதி விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளும் திகதி அல்லது அதற்கு முந்தியதாக இருக்க வேண்டும்.

**கவனத்திற்கொள்ள வேண்டியவை:**

* மேற்குறிப்பிட்ட 2.1 இலிருந்து 2.3 வரையுள்ள நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டிருப்பின் கட்டாயமாக நீங்கள் விண்ணப்பிக்கும் பயிற்சி நெறிக்காக இணைத்துக் கொள்ளப்படுகின்றீர்களென இந்த வர்த்தமானி அறிவித்தலில் எந்த இடத்திலும் அல்லது பந்தியிலும் குறிப்பிடப்படவில்லை என்பதை நீங்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

* அந்த 2.1 இலிருந்து 2.3 வரையிலான நிபந்னைகளைப் பூர்த்தி செய்திருப்பின் உங்களது தகைமைகள் போதியளவு இல்லாமை அல்லது இங்கு குறிப்பிடப்பட்டுள்ள வேறு நிபந்தனைகள் பூரணமில்லாதிருப்பின் எக்காரணங் கொண்டும் இப்பயிற்சி நெறிக்கு நீங்கள் தகைமையற்றவரென தெரிந்து கொள்ள வேண்டும்.

* அதேபோல் நீங்கள் போதியளவு Z புள்ளிகளைப் பெற்றுள்ளவராகவும் மற்றைய அனைத்து நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தவராக இருந்து 2.1 இலிருந்து 2.3 வரையான நிபந்தனைகள் பூர்த்தி செய்தவராக இருப்பின் நீங்கள் எக்காரணங் கொண்டும் இப்பயிற்சி நெறிக்கு தகைமையற்றவரென நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

**2. கல்வித் தகைமைகளும் பதவிக்குத் தேவையான வேறு தகைமைகளும் :**

| இல. | பயிற்சி நெறி | க.பொ.த. (சா.த.) பெறுபேறு | க.பொ.த. (உ.த.) பெறுபேறு | பயிற்சிக்கான விசேட தகைமைகள் |
|---|---|---|---|---|
| 1 | குடும்ப நல உத்தியோகத்தர் | க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் சிங்கள மொழி/ தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஆங்கில மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தி | க. பொ. த. (உ.த) பரீட்சையில் ஒரே அமர்வில் உயிரியல், பௌதீகவியல், இரசாயனவியல் மற்றும் விவசாய விஞ்ஞானம் இவற்றில் ஏதாவது மூன்று பாடங்களில் சித்தி | * பெண்கள் மட்டும் விண்ணப்பிக்க முடியும்<br>* உயரம் 4 அடி 10 அங்குலமும் அதற்கு மேலும்<br>* விண்ணப்பதாரர் விவாக மாகாதவராகவும் பயிற்சிக் காலத்திலும் உள்ளக பயிற்சிக் காலத்திலும் நியமனம் பெறும் வரை விவாகம் செய்ய முடியாது. |

**4. ஏனைய தகைமைகள் :**

(அ) 15.04.2014 ஆந் திகதியில் 18 வயதிற்குக் குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும் ;

(ஆ) பயிற்சியின் பின் நியமிக்கப்பட்ட மாகாணத்தில் குறைந்தது 10 ஆண்டுகள் சேவை செய்ய விருப்பம் தெரிவித்தல் வேண்டும்;

(இ) உடல், உள தகுதியுடன் சுக தேகியாகவும் இருக்க வேண்டும் ;

(ஈ) விண்ணப்பதாரர் விண்ணப்பிக்கும் மாவட்டத்தில் விண்ணப்பிக்கும் திகதிக்கு முன் மூன்று ஆண்டுகள் வசித்து வருபவராக இருக்க வேண்டும்;

5. **விண்ணப்பிக்கும் முறை:**

(அ) இத்துடன் இணைக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய விண்ணப்பப்படிவம் தயாரித்து (அதற்காக ஏ4 அளவு பத்திரத்தை உபயோகிக்கவும்.) அவ்விண்ணப்பப்பத்திரத்தில் 1 இலிருந்து 10(அ) வரை 1 ஆம் பக்கத்திலும் 10(ஆ) இலிருந்து 13 வரை 2 ஆம் பக்கத்திலும் வரும் வகையிலும் தயாரித்தல் வேண்டும்;

(ஆ) ஒவ்வொரு விண்ணபத்தின் முத்திரைக்குரிய இடத்தில் ரூபா 300 இற்குரிய முத்திரையினை கழறாதவகையில் ஒட்டி அதன் மேல் தங்களது கையொப்பத்தை இடுவதன் மூலம் அதனை இரத்துச் செய்தல் வேண்டும்;

(இ) விண்ணப்பதாரியின் கையொப்பம் இலங்கை நிர்வாக சேவை/கல்விச் சேவை/அரச கணக்காளர் சேவை/அரச பாடசாலை அதிபர்/சமாதான நீதவான்/சட்டத்தரணி அல்லது வருடாந்த சம்பளம் 2,40,360 ரூபாவுக்குக் குறையாத அரசாங்க உத்தியோகத்தர் ஆகியவர்களில் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "குடும்ப நல உத்தியோகத்தர் பயிற்சி நெறிக்கான ஆட்சேர்ப்பு - 2014" என எழுதப்பட்டு பதிவுத் தபாலில் 2014.04.15 ஆந் திகதிக்கு முன் "பணிப்பாளர் (நிர்வாகம்) 02, சுகாதார அமைச்சு, 'சுபசிரிபாய', இல. 385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு 10" என்ற முகவரிக்கு கிடைக்கும்படி அனுப்ப வேண்டும்.

6. அரசாங்கத்தின் அல்லது அரசாங்கத்துடன் இணைந்த தாபனங்களில் சேவை செய்வோர் தமது விண்ணப்பங்களை அவர்களது திணைக்களத் தலைவர் ஊடாக அனுப்பப்படல் வேண்டும். மேலும் இது வெளியார் ஆட்சேர்ப்பு செய்தல் என்பதையும் கருத்திற் கொள்ளல் வேண்டும்.

7. விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறியத்தரப்படமாட்டாது.

8. முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

9. அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவை அடங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

10. மேற்குறிப்பிட்ட தகைமைகளையுடைய விண்ணப்பதாரிகளில் Z புள்ளிகளின்படி தயாரிக்கப்படும் முதன்மைப் புள்ளிகளின் ஆவணத்தினூடாகத் தெரிவு செய்யப்படுபவர்கள் மாத்திரம் சுகாதார அமைச்சின் பதவி நிலை உத்தியோத்தர்கள் அடங்கிய நேர்முகப் பரீட்சைக் குழுவிற்கு நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுபவர். கீழே குறிக்கப்பட்டுள்ள ஆவணங்களின் மூலப் பிரதி சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(அ) பிறப்புச் சான்றிதழ்;

(ஆ) க. பொ. த. (உ.த.) பரீட்சைப் பெறுபேற்றுச் சான்றிதழ் மூலப்பிரதி Z - புள்ளிகள் அளவு குறிப்பிடப்பட்டிருக்கும் சான்றிதழ் (உறுதிப்படுத்தப்பட்ட பிரதி விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.)

(இ) க.பொ.த. (சா.த.) பரீட்சைப் பெறுபேற்றுச் சான்றிதழ் மூலப்பிரதி ;

(ஈ) தேசிய அடையாள அட்டை/கடவுச்சீட்டு/சாரதி அனுமதிப்பத்திரம். (உறுதிப்படுத்தப்பட்ட பிரதி விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.)

(உ) கிராம சேவையாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழ் மூலம் வதிவிடப் பதிவானது பிரதேச செயலாளரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும் ;

(ஊ) தான் திருமணமாகாதவர் என்பதை நிரூபிக்க சமாதான நீதவான் ஒருவரின் முன்னிலையில் கையொப்பமிட்ட சான்றிதழ் ஒன்று சமர்ப்பிக்க வேண்டும்.

11. **பயிற்சித் திட்டம்** ;

(I) தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்திகள் பயிற்சி நெறிக்காக அந்தந்த பயிற்சிப் பாடசாலைகளுக்கு அனுமதிக்கப்படுவர். பயிற்சியாளர்களுக்கு சிங்களம்/தமிழ் மொழிமூலம் பயிற்சிகள் வழங்கப்படும்;

(II) பயிலுநர்கள் பயிற்சிப் பாடசாலையின் நடைமுறையிலிருக்கும் சட்ட விதிகளுக்கும் மற்றும் சுகாதாரத் திணைக்களத்தினால் காலத்திற்குக் காலம் வெளியிடப்படும் கட்டளைக்கும் கட்டுப்படல் வேண்டும்;

(III) பயிற்சிக்காலத்தினுள் நடத்தப்படும் பரீட்சைகளில் சித்தியடையத் தவறும் அல்லது செயற்பாடுகள், நடத்தைகளில் அதிருப்தி கண்டறியப்படும் அல்லது பயிற்சிப்பாடசாலை விதிமுறைகளைப் பின்பற்றத்தவறும் பயிற்சியாளர்கள், இப்பயிற்சிக்காலத்தின் எச்சந்தர்ப்பத்திலும் எதுவித நஷ்டஈடுகளும் வழங்கப்படாமல் விலக்கப்படுவர்.

(IV) இப்பயிற்சிக்காலத்தின் போது பயிலுநர்களுக்கு மாதாந்தம் 12,360 ரூபா கொடுப்பனவாக வழங்கப்படும்.

(V) பயிலுனர்கள் பயிற்சிப் பாடசாலைகளுக்கு அனுமதிக்கப்படும்போது பயிலுநரானவர், பயிற்சியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்வதாகவும் பயிற்சியின்போது அதனை விட்டு விலகமாட்டேன் எனவும், பயிற்சியின் பின் சுகாதார திணைக்கள சேவையில் நியமனம் வழங்கப்படின் ஆக் குறைந்தது 10 வருடங்கள் சேவையாற்றுவேன் எனவும் சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகத்துடனான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டும். பயிற்சி நெறியிலிருந்து விலகுவதாயின் அல்லதுபயிற்சியில் தொடரமுடியாவிடின் அல்லது மேற்குறிப்பிட்ட III இன் பிரகாரம் பயிற்சியிலிருந்து நீக்கப்பட்டால் திணைக்களத்தினூடாக அரசாங்கம் அவருக்காக வழங்கிய கொடுப்பனவுகளையும் மேற்கொண்ட செலவுகளையும் பயிலுநர் மீள் செலுத்த வேண்டும். இல்லாவிடின், அவற்றை மீளப் பெறுவதற்கான உரிய நடவடிக்கைகளை திணைக்களம் மேற்கொள்ளும்.

12. **சேவைக்கு நியமிக்கும் விதிகள் :**

பயிற்சியின் இறுதியில் நிரந்தர நியமனம் செய்தல் அரசாங்கத்தின் கட்டாயமல்ல. ஆனாலும் பயிற்சியாளர்கள் பயிற்சிக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட பாடநெறிக்குரிய ஆட்சேர்ப்பு சட்டதிட்டங்களுக்கு மற்றும் மாகாணத்திலுள்ள வெற்றிடங்களின் அடிப்படையில் உரிய பதவி III ஆம் வகுப்பிற்கு நியமிப்பது தொடர்பில் கவனம் எடுக்கப்படும். முதல் நியமனத் திகதியில் இருந்து 10 வருடத்திற்கு முதல் நியமனம் வழங்கப்பட்ட இடத்தில் சேவை செய்வது கட்டாயமாகும்.

பயிற்சி நெறி முடிவில் நடத்தப்படும் இறுதி எழுத்துப்பரீட்சையின் பெறுபேறுகளின் மூலம் தயாரிக்கப்படும் திறமை அட்டவணை அடிப்படையில் மாகாண மட்டத்தில் 70% ஆட்சேர்த்துக் கொள்ளப்படுவதுடன் நாடு முழுவதிலுமிருந்து திறமை அடிப்படையில் 30% ஆட்சேர்த்துக் கொள்ளப்படும் என்பதை கருத்திற் கொண்டு வெற்றிடங்கள்உள்ள இடங்களில் நியமனங்கள் வழங்கப்படும்.

13. விண்ணப்பங்களை நிரப்பும் போது கல்வி மற்றும் ஏனைய தகைமைகளை மிகவும் கவனமாகவும் சரியாகவும் நிரப்பவும். பயிற்சிகளின் போது அல்லது நியமனங்கள் வழங்கப்பட்ட பின்னரோ சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் போலியனவை எனக் கண்டுபிடிக்கப்படின் பயிற்சியிலிருந்து, சேவையிலிருந்து இடைநிறுத்தப்படவோ அல்லது விலக்குவதற்கும் மற்றும் அரச சேவையில் மீள அனுமதிக்கப்படவோ முடியாதவாறு கறுப்புப் பட்டியலில் பெயரை சேர்க்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் பயிற்சிக் காலத்தில் தங்களுக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகள், அரசாங்கத்திற்கு ஏற்பட்ட செலவினங்கள், பிணைக்கான நிதி என்பவை செலுத்த வேண்டும். இல்லையேல் அதனைப் பெற்றுக்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

14. தேர்ந்தெடுக்கப்பட்ட பயிலுநர்கள் பயிற்சிக்காலத்தின் 1 வது மாதத்தில் இலங்கையின் எப்பகுதியிலும் சேவையினை மேற்கொள்ளக்கூடியதாக தமது உடல் மற்றும் உளத் தகுதியினை நிரூபிப்பதற்கான மருத்துவப் பரிசோதனைக்குட்படுத்தப்படுவர். இப்பரிசோதனையில் தகுதியற்றவர்பயிற்சியைத் தொடர்தல் நிராகரிக்கப்படும்.

15. மேற்கூறப்பட்ட படி சேர்த்துக் கொள்ளப்பட்ட அனைத்து உத்தியோகத்தர்களும் அரச சேவைக்கான அனைத்து சட்டங்களிற்கும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் விதிகள் மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் கொள்கை அமுலாக்கலுக்கு ஏற்பவும் நிதி ஒழுங்கு விதிகள் மற்றும் காலத்துக்குக் காலம் ஏற்படும் அரச சட்ட மூங்கு மாற்றங்களுக்கு கட்டுப்பட்டு செயற்பட வேண்டும்.

16. இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்படாத பயிற்சி நெறிக்காக சேர்த்துக் கொள்வது தொடர்பாக எழும் எந்தவொரு விடயத்திற்கும் சுகாதார அமைச்சின் செயலாளரின் முடிவே இறுதியானதாகும்.

இவ்வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகியவற்றில் ஏதாவது வசனப் பிழை ஏற்படின் சிங்கள மொழியில் உள்ளதே சரியானது எனக் கவனத்தில் எடுக்கப்படும்.

17. பயிற்சியில் சேர்த்துக் கொள்ளப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு பயிற்சிப் பாடசாலைகளில், தங்குவதற்கான வசதி அமைச்சினால் வழங்கப்பட மாட்டாது. அவ்வாறு வழங்கப்படின் அதற்கான மதிப்பீடு செய்யப்பட்ட இட வாடகை மற்றும் நீர், மின் கட்டணங்கள் செலுத்த வேண்டும்.

18. இப்பயிற்சிக் காலத்தில் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அல்லது தனிப்பட்ட வேலைகளில் ஈடுபடுவதற்கு உரிமை இல்லை. அவ்வாறு பயிற்சியின் பின் நீங்கள் உரிய பதவிக்கு நியமிக்கப்படின் அதன்பின் தனிப்பட்ட சேவையில் ஈடுபடுவதற்கும் உரிமை இல்லை. அவ்வாறு ஈடுபட்டால் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும்.

(வைத்திய கலாநிதி) வை. டி. நிஹால் ஜயதிலக,
செயலாளர்,
சுகாதார அமைச்சு.

சுகாதார அமைச்சு,
"சுவசிறிபாய",
இல. 385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை,
கொழும்பு 10.
2014, சனவரி 27.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**துணை மருத்துவத் துறையின் கீழ் குடும்ப நல சேவை உத்தியோகத்தர்கள் பயிற்சிக்கான பயிலுநர்கள் ஆட்சேர்ப்பு - 2014**

| பயிற்சி நெறிக்கான குறியீட்டு இல. (வர்த்தமானியில் உள்ளவாறு) |
|---|
| |

வர்த்தமானியின் அறிவித்தலை முழுமையாக வாசித்த பின் நிரப்புக.

* விண்ணப்பிக்கும் பாடநெறி (சிங்களத்தில்/தமிழில்) :-----.
* விண்ணப்பிக்கும் பாடநெறி (ஆங்கிலத்தில்) :-----.

1. (அ) முதல் எழுத்துக்களுடன் பெயர் :-----.
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) உ+ம் - A.B. C. SILVA)
(ஆ) முழுப் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில் :-----.
(இ) முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :-----.

2. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :----- (பிரதி இணைக்கவும்)

3. (அ) தபால் முகவரி :- சிங்களத்தில்/தமிழில் ........................ ........................ ........................ ........................ ஆங்கிலத்தில் ............................ ............................ ............................ ............................

4. (அ) நிரந்தர முகவரி சிங்களத்தில்/தமிழில் ........................ ........................ ........................ ........................ ஆங்கிலத்தில் ............................ ............................ ............................ ............................

(ஆ) தொலைபேசி இலக்கம் : (கையடக்க) :-----.
நிலையான :-----.

(இ) வசிக்கும் மாவட்டம் (சிங்களத்தில்/தமிழில்) :-----. (ஆங்கிலத்தில்) :-----.

(ஈ) நீங்கள் இந்த மாவட்டத்தில் நிரந்தர வதிவிடமுடையவரா? ஆம்/இல்லை :-----.

5. பிறந்த திகதி : ஆண்டு :-----, மாதம் :-----, திகதி :-----.

2014.04.15 ஆந் திகதியன்று வயது : வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

6. உயரம் : ----- அடி ----- அங்குலங்கள்

7. பால் :- ஆண் : ☐ பெண் : ☐

8. இலங்கைப் பிரஜையா ? :- ஆம் ☐ இல்லை ☐

9. விவாக நிலைமை : விவாகமானவர் ☐ விவாகமாகாதவர் ☐

10. கல்வித் தகைமைகள் :

(அ) க.பொ.த. (உ.த) பரீட்சை Z புள்ளியுடனான பெறுபேற்றுப் பத்திரத்தின் உறுதி செய்த பிரதியை இணைக்கவும்.

பரீட்சைக்கு தோற்றிய மாவட்டம் :-----.

ஆண்டு :-----. சுட்டெண் :-----.

Z புள்ளி :-----.

| | பாடம் | சித்தி |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |

க.பொ.த. (சா.த.) பரீட்சை பெறுபேற்றுப் பத்திரம் (உறுதிப்படுத்தப்பட்ட பெறுபேற்றுப் பத்திரத்தை இணைக்கவும்).

| | பாடம் | முதலாம் அமர்வு | | இரண்டாம் அமர்வு | |
|---|---|---|---|---|---|
| | | வருடம் | | வருடம் | |
| | | சுட்டெண் | | சுட்டெண் | |
| 1. | சிங்கள மொழி/தமிழ் மொழி | | | | |
| 2. | கணிதம் | | | | |
| 3. | விஞ்ஞானம் | | | | |
| 4. | ஆங்கிலம் | | | | |
| 5. | | | | | |
| 6. | | | | | |
| 7. | | | | | |
| 8. | | | | | |
| 9. | | | | | |
| 10. | | | | | |
| 11. | | | | | |
| 12. | | | | | |

11. ஏதாவது குற்றச்செயலுக்காக நீதிமன்ற தண்டனை அனுபவித்துள்ளீரா ?
(பொருத்தமான கூட்டில் "✓" குறியிடுக.)

| | |
|---|---|
| ஆம் | |
| இல்லை | |

ஆம் எனில் தயவு செய்து காரணத்தைக் குறிப்பிடுக :-----.

12. (அ) வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை நன்கு வாசித்தும் அதிலுள்ள நிபந்தனைகளை நன்கு அறிந்தும் என்னால் இவ்விண்ணப்பப்பத்திரம் நிரப்பப்பட்டதென்றும் நான் எந்தவொரு முழுநேர பாடநெறியில் ஈடுபடவில்லை என்றும் எனது அறிவுக்கெட்டியவரையில் இவ் விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ளவை அனைத்தும் உண்மையானவை எனவும்,

(ஆ) இங்கு என்னால் கொடுக்கப்பட்ட விபரங்களில் ஏதாவது பிழையென அல்லது தவறு எனக் காணுமிடத்து நான் சேவையிலிருந்து விலக்கப்படுவேன் என நான் நன்கறிவேன்.

ரூபா 300 பெறுமதியான முத்திரை

திகதி :-----.

.........................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

13. **கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

செல்வி .................... ஐ எனக்கு தனிப்பட்ட முறையில் பரீட்சயமானவர் என்றும் அவரது கையொப்பத்தை எனது முன்னிலையில் ........................... ஆந் திகதி இட்டார் என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

....................................................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்,
(பதவி முத்திரையுடன்).

திகதி :-----.
உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :-----.
பதவி :-----.
முகவரி :-----.
திகதி :-----.

3-335

**கல்வி அமைச்சு**

ஆசிரியர் கல்லூரிகளில் ஆசிரியர் கல்விப் பாடநெறியைப் பின்பற்றுவதற்காக ஆசிரியர்களைத் தெரிவு செய்தல் - 2013/2014

**2013.07.05 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலில் திருத்தம் செய்தல்**

01. ஆசிரியர் கல்லூரிகளில் ஈராண்டு கால ஆசிரியப் பயிற்சி நெறியை மேற்கொள்வதற்குப் பின்வரும் தகைமைகள் கொண்ட ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :

1.1. கல்விச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் அல்லது மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் கையொப்பத்துடன் முறையான நியமனத்தைப் பெற்று அரசாங்கப் பாடசாலைகளில் பணியாற்றும் பயிற்றப்படாத ஆசிரியர்கள்,

1.2. கல்வியமைச்சின் தனியார் பாடசாலைகளின் பணிப்பாளரால் உறுதிப்படுத்தப்பட்ட தனியார் பாடசாலைகளின் பெயர்ப்பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள மற்றும் மாகாணக் கல்விப்பணிப்பாளர் அனுமதியளித்துள்ள நியமனங்களைக் கொண்டுள்ள ஆசிரியர்கள்,

1.3. கல்வியமைச்சின் பிரிவெனா கல்விப்பிரிவில் பதிவுசெய்யப்பட்டு மாகாணக்கல்விப் பணிப்பாளரால் அங்கீகரிக்கப்பட்ட நியமனங்களைக் கொண்ட பிரிவெனா ஆசிரியர்கள்.

1.4. மகரகமை தேசிய கல்வி நிறுவகத்தினால் நடைமுறைப் படுத்தப்பட்ட தொலைக்கல்வி அல்லது பிரின்செட் அல்லது பட்டதாரியல்லாத பயிற்றப்படாத ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் பாடநெறியில் ஆசிரியர் பயிற்சிநெறியை மேற்கொண்டு சித்திபெறவில்லையென தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சி அதிகாரிகளால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள ஆசிரியர்கள்.

02. **விசேட அறிவுறுத்தல்கள் :**

2.1 தெரிவானது ஆசிரியர் கல்லூரியில் காணப்படும் வெற்றிடத்திற்கேற்ப பாடசாலையில் கடமையேற்றதன் முன்னுரிமையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். ஆசிரியர் சேவை பதவி உயர்வின்போது தொழில்சார் தகைமை இல்லாமையால் பாதிப்பேற்படுவது மட்டுமன்றி பாடசாலைக் கல்வியின் தரவிருத்தியை மேம்படுத்துவதற்குத் தடையாகவும் அமையும். இவற்றைக் கருத்திற்கொண்டு பயிற்றப்படாத ஆசிரியர்கள் பயிற்சியைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

2.2 இப்பயிற்சிநெறி ஈராண்டுகால உள்ளகப் பயிற்சியாக அமைவதுடன் விடுதிவசதிகள் இல்லாதவிடத்து கல்லூரி அதிபரின் எழுத்துமூல அனுமதியுடன் கல்லூரிக்கு அண்மையில் தங்கியிருப்பதற்கு அனுமதிக்கப்படும்.

2.3 ஒவ்வொரு கல்லூரியிலும் நடத்தப்படும் பயிற்சிநெறிகள் அக்கல்லூரிகளில் காணப்படும் வளங்கள் மற்றும் வசதிகள் என்பவற்றிற்கேற்ப தீர்மானிக்கப்படுவதனால் எப்போதும் கிட்டிய கல்லூரியைப் பெற்றுத்தர முடியாதிருக்கும்.

2.4 ஆசிரியர் கல்லூரியின் பயிற்சிக்காலப்பகுதியில் வேறு பாடநெறிகளைப் பின்பற்றுவதோ வேறு வெளிவாரிப் பரீட்சைகளுக்குத் தோற்றுவதோ கூடாது. அது தொடர்பாகக் கிடைக்கப்பெறும் தகவல்கள் மற்றும் பாடநெறியை விட்டுச்செல்லல் தொடர்பில் முறையான விசாரணையின் பின் ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

2.5 பின்வரும் ஆசிரிய வகையினருக்கு இப்பாடநெறி பொருந்தாது:

(அ) ஏதாவதொரு ஆசிரிய கல்லூரியொன்றில் பயிற்சியைப் பெற்றுக்கொண்டிருக்கும் அல்லது பயிற்சி பெற்றுள்ள ஆசிரியர்கள்

(ஆ) பட்டதாரி நியமனம் அல்லது பட்டதாரிப் பயிலுநர் நியமனம் அல்லது பட்டதாரி முகாமைத்துவ உதவி யாளர் நியமனம் அல்லது அதற்குச் சமமான ஏதாவதொரு பட்டதாரி நியமனம் பெற்றுள்ளவர்கள்,

(இ) இதன் 7 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பெற்றிராத ஆசிரியர்கள்,

மேற்குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய் யாதவர்கள் பாடநெறிக்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாக அறியவரக்கூடிய எச்சந்தர்ப்பத்திலும், பயிலும் காலத்திலாயின் பயிற்சி இரத்துச் செய்யப்படுவதோடு பயிற்சியின் பின்பாயின் அவரின் சான்றிதழ் செல்லுபடியற்றதாக்கப்படும்.

2.6 ஒவ்வொரு விண்ணப்பதாரியும் கீழே குறிப்பிடப்படும் ஆவணங்களை பயிற்சிக்காக பதிவு செய்வதற்கு அழைக்கப்படும் தினத்தன்று ஒப்படைக்க வேண்டும் :

(அ) பூரணப்படுத்தப்பட்ட பிணைமுறி,

(ஆ) ஆசிரிய கல்விப் பாடநெறியைப் பூர்த்திசெய்த பின் நியமனம் வழங்கப்படும் பாடசாலைகளில் (அரசாங்க ஆசிரியர்கள் அரசாங்கப் பாடசாலைகளுக்கும் அரசாங்க சேவையில் இல்லாத ஆசிரியர்கள் உரிய நிருவாகக் குழுவின் கீழும்) தொடர்ச்சியாக ஐந்து ஆண்டுகள் சேவை செய்வதாக அரசுடன் அல்லது நிர்வாகக் குழுவுடன் செய்துகொண்டுள்ள ஒப்பந்தப் பத்திரத்தின் பிரதி,

2.7 1982 ஆம் ஆண்டின் ஏப்பிரல் மாதத்தின் பின்பு மாவட்ட சேவைத்திட்டத்தின் கீழ் நியமனம் பெற்று பயிற்சிக்காகச் சேரும் ஆசிரியர்கள் பயிற்சியின் பின்பும் முதல் நியமனம் பெற்ற அம்மாவட்டங்களிலேயே கடமையாற்றுவதற்குக் கேட்டுக் கொள்ளப்படுவர்.

2.8 ஆசிரிய கல்லூரிக்கு அனுமதிக்கப்பட்ட பின் ஒரு பயிற்சி ஆசிரியர் தனது விருப்பத்தின் பேரில் பயிற்சியினை இடைநிறுத்த அனுமதி வழங்கப்படமாட்டாது. அவ்வாறு விலகினால் பயிற்சிக்கால அரச செலவினங்களை மதிப்பிட்டு மேலதிக கட்டணத்துடன் அறவிட நடவடிக்கை எடுக்கப்படும்.

2.9 வர்த்தமானி அறிவித்தலில் மேற்கூறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் எழும் பிரச்சினைகள் தொடர்பாக இறுதித் தீர்மானம் கல்வி அமைச்சின் செயலாளரால் எடுக்கப்படும்.

03. (i) ஆசிரிய கல்லூரி அதிபரினால் எதிர்பார்க்கப்படும் மட்டத்திற்கு வரவு மற்றும் கற்றலில் ஊக்கம் காட்டாத, பயிற்சிக் காலத்தில் கல்லூரிகளின் ஒழுக்காற்று ஒழுங்கு முறைகளை அனுசரித்து நடக்கத்தவறும் பயிற்சியாளர்கள் பயிற்சியிலிருந்து நிறுத்தப்படுவர். பயிற்சி பெறும் ஒரு ஆசிரியரின் பாடங்களுக்கான பங்களிப்பு, வரவு என்பன 80%திற்குக் குறைவாயின் அவர் ஆசிரிய கல்லூரி இறுதிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது. எனினும் ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் விசேட காரணங் களைக் கருத்திற்கொள்ள வேண்டியிருப்பின் இது தொடர்பாக கல்விச் செயலாளரின் தீர்மானமே இறுதியானதாகும்.

(ii) விடுமுறை :

நிறுவனப் பயிற்சிக்காக ஈராண்டு முழுச்சம்பளத்துடனான கற்கை விடுமுறை வழங்கப்படும். இக்கற்கை விடுமுறைக்

காலத்தை முழுமையாகப் பயிற்சிக்காகப் பயன்படுத்த வேண்டும். எனினும் ஆசிரிய பயிற்சி பெறுபவருக்கு அவசியமென அதிபர் திருப்தியடையக்கூடிய பட்சத்தில் மாத்திரம் குறிப்பிட்ட நாட்கள் அமைய விடுமுறை வழங்கப்படலாம்.

அதற்காக அதிபரின் முன்னனுமதி பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பதை கருத்திற்கொள்ளவும். இவ்வாறு பெற்றுக்கொள்ளப்படும் விடுமுறை ஆண்டுக்கு பத்து (10) நாட்களுக்குக் கூடாதிருக்க வேண்டும்.

அதிக விடுமுறைகளைப் பெற்றுக்கொள்வதன் காரணமாக, பாடநெறியைப் பின்பற்றுவதில் முன்னேற்றம் திருப்தியற்றதாக யாராவது ஒரு பயிற்சியாளர் பற்றி அதிபர் அறிக்கை சமர்ப்பிப்பின் பயிற்சியை இடைநிறுத்தி மீண்டும் பாடசாலைக்கு அனுப்பி வைக்கப்படுவர். வைத்திய விடுமுறைகளுக்கு அரசாங்க அனுமதிபெற்ற வைத்தியரின் வைத்தியச் சான்றிதழ் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

04. ஆசிரிய கல்லூரியினால் நடாத்தப்படும் உள்ளகப் பரீட்சைகள் மற்றும் ஈராண்டு கால ஆசிரிய பயிற்சி நெறியை வெற்றிகரமாகப் பூரணப்படுத்தியதன் பின்னர் பரீட்சை ஆணையாளரினால் நடாத்தப்படும் இறுதிப்பரீட்சையில் சித்தி பெறுவோருக்கு ஆசிரியப் பயிற்சிச் சான்றிதழ் வழங்கப்படும்.

05. **சம்பள அளவுத்திட்டம்**

ஆசிரியர் சேவைப் பிரமாணத்துக்கு அமைவாகவும் பின்னர் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்திற்கு உட்பட்டதாகவும் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் ஆசிரிய சேவையில் உள்வாங்கப்பட்டு ஏற்புடைய சம்பள அளவுத்திட்டம் நிர்ணயிக்கப்படும்.

06. (i) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நியமன வகைக்கேற்பவே ஆசிரிய பயிற்சியைப் பெறவேண்டும். ஏனைய பாடத்தில் நியமனம் பெற்றவர்கள் விசேட கல்வி பாடநெறிக்கு விண்ணப்பிக்க முடியும். அரசாங்க ஆசிரியர்களாக நியமனம் பெற்று அவர்களின் நியமனக் கடிதத்தில் நியமனத்தின் வகை குறிப்பிடப்படாதவர்களைப் பொறுத்தவரை க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையில் தொடர்புடைய பாடத்தில் அவர்கள் சித்தி பெற்றிருப்பதுடன் குறித்த பாடத்தைக் கற்பிக்கின்றார்களாயின் அவர்கள் விண்ணப்பிக்க முடியும். குறித்த பாடத்தை கற்பிப்பதாக நிறுவனத் தலைவரால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்தினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

க. பொ. த. (சாதாரண தர) தகைமையின் அடிப்படையில் நியமிக்கப்பட்டு அவர்களின் நியமனக் கடிதத்தில் நியமனத்தின் வகை குறிப்பிடப்பட்டிராத ஆசிரியர்களைப் பொறுத்தவரை அவர்கள் ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களாகவே கருதப்படுவர்.

நியமனக் கடிதத்தில் நியமனத்தின் வகை குறிப்பிடப்பட்டிராத தனியார், பிரிவெனா ஆசிரியர்களைப் பொறுத்தவரை அவர்கள் கற்பித்த பாடங்களின் அடிப்படையில் பயிற்சிக்காக தெரிவு செய்யப்படுவர். இவ்வகையினர் நிறுவனத் தலைவரால் அங்கீகரிக்கப்பட்ட நேரசூசியின் பிரதி ஒன்றைச் சமர்ப்பித்தல் அவசியமாகும்.

(ii) ஏதாவதொரு பாடநெறியொன்றிற்குப் போதிய விண்ணப்ப தாரிகள் தொகை இல்லாதிருப்பின் அப்பாடநெறியை நடாத்துவது அல்லது நடாத்தாதிருப்பது பற்றி கல்வி அமைச்சின் செயலாளர் தீர்மானிப்பார்.

| | பாடநெறி எண் | பாடநெறியின் பெயர் |
|---|---|---|
| i. | 01 | சிங்களம் |
| ii. | 02 | ஆரம்பக் கல்வி |
| iii. | 03 | சமூகவியல் |
| iv. | 04 | விஞ்ஞானம் |
| v. | 05 | கணிதம் |
| vi. | 06 | விவசாயம் |
| vii. | 07 | மனையியல் |
| viii. | 08 | ஆங்கிலம் |
| ix. | 09 | புத்த சமயம் |
| x. | 10 | கிறிஸ்தவம் / ரோமன் கத்தோலிக்க சமயம் |
| xi. | 11 | இந்து சமயம் |
| xii. | 12 | இஸ்லாம் |
| xiii. | 13 | சித்திரம் |
| xiv. | 14 | சங்கீதம் |
| xv. | 15 | நடனம் |
| xvi. | 16 | அரபு |
| xvii. | 17 | விசேட கல்வி |
| xviii. | 18 | கைப்பணியும், தொழில் நுட்பமும் |
| xix. | 19 | வணிகம் |
| xx. | 20 | தமிழ் |
| xxi. | 21 | உடற்கல்வி |
| xxii. | 22 | இரண்டாம் மொழி (சிங்களம் / தமிழ்) |

07. (i) ***தகைமைகள்***

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்:-

I. சிறந்த நல்லொழுக்கமுடையவராக இருக்க வேண்டும்.
II. இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்.
III. இரண்டு தடவைகளுக்கு மேற்படாத தடவையில் கணிதம். தாய்மொழி உப்பட 06 பாடங்களில் க. பொ. த. (சா.த) அல்லது தே. பொ. க. த. பரீட்சையில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.
IV. அரசாங்கப் பாடசாலைகளில் சேவையாற்றும் ஆசிரியர்கள் 2013/12/31 ஆந் திகதிக்கு குறைந்தபட்சம் மூன்று மாத காலம் ஆசிரியராக தமது சேவையைப் பூர்த்தி செய்திருக்கவேண்டும்.
V. சகல விண்ணப்பதாரரும் தமது நியமனத்தின் தன்மையை முதல் நியமனக் கடித மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.

(ii) கீழ்க் குறிப்பிடப்படும் பாடநெறிகளைத் தெரிவு செய்பவர்கள் மேற்சொல்லப்பட்ட தகைமைகளுக்கு மேலதிகமாக கீழ்க் குறிப்பிடப்படும் தகைமைகளையும் பெற்றிருக்க வேண்டும்.

(அ) சிங்கள மொழிப் பயிற்சி நெறி –

க. பொ. த. (உ.த) பரீட்சையில் சிங்கள மொழிப் பாடத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல்.

(ஆ) விஞ்ஞானப் பாடநெறி –

I. பழைய பாடத்திட்டத்தின் பௌதீகவியல், தாவரவியல், உயிரியல், விலங்கியல், இரசாயன வியல், கணிதம் ஆகிய பாடங்களில் இரண்டிற் காவது க. பொ. த. (சா.த.) இல் அல்லது சிரேஷ்ட பாடசாலைத் தராதரப்பத்திரப் பரீட்சையில் திறமைச் சித்தி பெற்றிருத்தல். (உயிரியல், விலங்கியலோடு அல்லது தாவரவியலோடு கணிக்கப்படமாட்டாது.) அல்லது

II. புதிய பாடத்திட்டத்தின் க.பொ. த (சா.த) பரீட்சையில் விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களில் சித்தி பெற்றிருத்தலும், விஞ்ஞானத்தில் சிறப்புச் சித்தி பெற்றிருத்தலும்: அல்லது

III. மேற்குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களில் இரண்டில் க. பொ. த. (உ.த.) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.

(இ) கணிதப் பாடநெறி –

I. பழைய பாடத்திட்டத்தின் பௌதீகவியல், பிரயோக கணிதம், தூய கணிதம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் குறைந்தபட்சம் இரண்டிலாவது க. பொ. த. (சா.த.) இல் அல்லது சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் இரண்டு திறமைச் சித்திகள் பெற்றிருத்தல் ; அல்லது

II. புதிய பாடத்திட்டத்தின் க. பொ. த. (சா.த.) பரீட்சையில் கணிதம்,விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் சித்தி பெற்றிருத்தலோடு, கணித பாடத்தில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் ; அல்லது

III. மேற்குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களுள் இரண்டு பாடங்களில் க. பொ. த. (உ.த.) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.

(ஈ) விவசாயப் பாடநெறி –

I. பழைய பாடத்திட்டத்தின் க. பொ. த. (சா.த.) இல் அல்லது சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் விவசாயம், இரசாயனவியல், தாவரவியல், விலங்கியல் ஆகிய பாடங்களில் ஒன்றில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் ; அல்லது

II. புதிய பாடத்திட்டத்தில் க. பொ. த. (சா.த.) பரீட்சையில் விஞ்ஞானம் மற்றும் விவசாய விஞ்ஞானம் பாடங்களில் சித்தியடைந் திருத்தல். அத்துடன் விவசாய விஞ்ஞானத்தில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் ; அல்லது

III. க. பொ. த. (உ. த.) பரீட்சையில் விவசாயம், இரசாயனவியல், தாவரவியல், விலங்கியல் ஆகிய பாடங்களில் ஏதாவதொன்றில் சித்தி பெற்றிருத்தல்; அல்லது

IV. தே. க. பொ. சா. பரீட்சையில் மேற்குறிப்பிடப் பட்டுள்ள ஒரு பாடத்திற்கு"ஏ" அல்லது"பீ" தேர்ச்சி பெற்றிருத்தல். (தொழில் முன்னிலைப் பாடமொன் றெனில் என்ன பாடமென்று அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்ட ஒரு கடிதம் அவசியமாகும்.); அல்லது

V. அரசாங்க விவசாய பண்ணையொன்றில் 06 மாத காலங்களுக்குக் குறையாத பயிற்சியைப் பெற்றிருத்தல்.

(உ) மனையியற் பாடநெறி –

I. க. பொ. த. (சா. த.) பரீட்சையில் அல்லது சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் மனையியல், தையல் வேலை ஆகிய பாடங்களில் ஒன்றில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் ; அல்லது

II. க. பொ. த. (உ. த.) பரீட்சையில் மனையியல் பாடத்தில் சித்தி பெற்றிருத்தல் ; அல்லது

III. தே. க. பொ. சா. பரீட்சையில் மேற்குறிப் பிடப்பட்டுள்ள ஒரு பாடத்திற்கு "ஏ" அல்லது "பீ" சித்தி பெற்றிருத்தல். (தொழில் முன்னிலைப் பாடமொன்றெனில் என்ன பாடமென்று அதிபரி னால் உறுதிப்படுத்தப்பட்ட ஒரு கடிதம் அவசிய மாகும்.); அல்லது

IV. அரசாங்க தொழில்நுட்பக் கல்லூரியொன்றில் ஓர் ஆண்டிற்குக் குறையாத மனையியற் பயிற்சியைப் பெற்றதற்கான சான்றிதழ்.

(ஊ) ஆங்கிலப் பாடநெறி –

I. தற்போது ஆங்கில உதவி ஆசிரியர் நியமனம் பெற்றிருத்தல் ; அல்லது

II. ஆங்கிலம் i, ii,iii ஆந் தர ஆசிரியத்தராதரப் பத்திரம் பெற்று தற்போது சேவையில் இருப்பதுடன்.

III. க. பொ. த. (சா. த.) பரீட்சையில்/ இலண்டன் சாதாரண தரப்பரீட்சையில் அல்லது சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் ஆங்கில மொழியில் அல்லது ஆங்கில இலக்கியத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் ; அல்லது

IV. அதனைவிட உயர் பரீட்சை ஒன்றில் ஆங்கிலப் பாடத்தில் சித்தி பெற்றிருத்தல்.

(எ) சமய பாடநெறி –

I. புத்த சமயம், ரோமன் கத்தோலிக்க சமயம், இந்து சமயம், இஸ்லாம் சமயம் ஆகிய பாடநெறிகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் தாம் தொடர்வதற்கு எதிர்பார்க்கும் சமய பாடத்தில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் அல்லது சிரேஷ்ட பாடசாலைத் தரா தரப் பரீட்சையில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் ; அல்லது

II. தே. க. பொ. சா. பரீட்சையில் சமய பாடத்தில் "ஏ" அல்லது "பீ" தரச் சித்தி பெற்றிருத்தல் ;அல்லது

III. மேலே (1) இல் குறிப்பிட்ட பாடத்தில் அல்லது அதனுடன் தொடர்புடைய பாடமொன்றில் க. பொ. த. (உ.த.) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் ;

(ஏ) சித்திரப்பாடநெறி –

I. அரச கவின் கலை நிறுவனத்தின் சான்றுப் பத்திரம் (சித்திரம் பற்றிய மூன்று வருட பயிற்சிநெறி) ; அல்லது

II. சித்திரக்கலை ஆசிரிய தராதரப் பத்திரம் (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்);அல்லது

III. க. பொ. த. (சா. த.) பரீட்சையில் அல்லது சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்திரப் பாடத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் ; அல்லது

IV. தே. க. பொ. சா. பரீட்சையில் சித்திரப் பாடத்தில் "ஏ" அல்லது "பீ" தரச் சித்தி பெற்றிருத்தல். (அழகியற் கலைப் பாடம் எது என்பதை அதிபர் கடித மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.) ; அல்லது

V. க. பொ. த. (உ. த.) பரீட்சையில் சித்திரப் பாடத்தில் சித்தி பெற்றிருத்தல்;

(ஐ) சங்கீதப் பாடநெறி –

I. இலங்கைக் 'காந்தர்வ' சபையின் சங்கீதம் பற்றிய இறுதி / மத்திம சான்றுப்பத்திரம் அல்லது கீழைத்தேய சங்கீதப் பரீட்சையில் அல்லது தேசிய சங்கீதப் பரீட்சையில் அல்லது தேசிய சங்கீதப் பரீட்சையின் ஆரம்பப் பரீட்சை ; அல்லது

II. அரசாங்க சங்கீதக் கல்லூரியின் இடைநிலைச் சான்றுப்பத்திரம் ; அல்லது

III. வட இலங்கை கீழைத்தேய சங்கீத ஆசிரிய சங்கத்தின் சங்கீத சான்றிதழ் (5 ஆம் வகுப்பு) ; அல்லது

IV. அங்கீகரிக்கப்பட்ட இந்திய சங்கீத நிறுவனமொன்றில் சங்கீதம் பற்றிய இடைமாணித் தராதரப் பத்திரம் ; அல்லது

V. க. பொ. த. (சா. த.) பரீட்சையில் அல்லது சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திர பரீட்சையில் சங்கீத பாடத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் ; அல்லது

VI. க. பொ. த. (உ. த.) பரீட்சையில் சங்கீத பாடத்தில் சித்தி பெற்றிருத்தல் ; அல்லது

VII. தே. க. பொ. சா. பரீட்சையில் சங்கீத பாடத்தில் "ஏ" அல்லது "பீ" தரச் சித்தி பெற்றிருத்தல் (அழகியற் கல்விப் பாடம் எது என்பதை அதிபர் கடித மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.)

(ஒ) நடனப் பாடநெறி –

I. இலங்கைக் காந்தர்வ சபையின் நடனம் பற்றிய இறுதி / மத்திம சான்றுப்பத்திரம் அல்லது கீழைத்தேய நடனப் பரீட்சையில் அல்லது தேசிய நடனப் பரீட்சையின் முதலாம் பரீட்சையில் ; அல்லது

II. அரசாங்க நடனக் கல்லூரியின் இடைநிலைச் சான்றுப்பத்திரம் ; அல்லது

III. அங்கீகரிக்கப்பட்ட இந்திய நடன நிறுவனமொன்றில் நடனம் பற்றிய இடைமாணித் தராதரப்பத்திரம் ; அல்லது

IV. க. பொ. த. (சா. த.) பரீட்சையில் அல்லது சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் நடன பாடத்தில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் ; அல்லது

V. க. பொ. த. (உ. த.) பரீட்சையில் நடன பாடத்தில் சித்தி பெற்றிருத்தல் ; அல்லது

VI. தே. க. பொ. சா. பரீட்சையில் நடன பாடத்தில் "ஏ" அல்லது "பீ" தரச் சித்தி பெற்றிருத்தல் (அழகியற் கல்விப் பாடம் எது என்பதை அதிபரினால் உறுதிப் படுத்தப்பட்ட கடிதம் அவசியம்.)

(ஓ) அரபுப் பாடநெறி –

I. பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் அல்-ஆலிம் ஆரம்பப் பரீட்சையின் i ஆம் ii ஆம் பரீட்சைகளில் தேர்ச்சி பெற்றிருத்தல் அல்லது க. பொ. த. (சா. த.) பரீட்சையில் அரபுப் பாடத்தில் சித்திபெற்றிருத்தல் : அல்லது

II. அங்கீகரிக்கப்பட்ட 'மத்ரஸா' நிறுவனமொன்றின் இறுதிப் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.
இதற்கான அங்கீகரிக்கப்பட்ட மத்ரஸாக்கள் வருமாறு :

1. பஹ்ஜதுல் இப்ராஹீமிய்யா அரபுக் கல்லூரி, கோட்டை,காலி
2. கபூரிய்யா அரபுக் கல்லூரி, மகரகம
3. மத்ரஸதுல் பாரி அரபுக் கல்லூரி, வெலிகம
4. காசிமிய்யா அரபுக் கல்லூரி,புத்தளம்
5. நத்வத்துல் உலமா அரபுக் கல்லூரி, மூதூர்
6. கிழக்கிலங்கை அரபுக் கல்லூரி, அட்டாளைச்சேனை
7. மத்ரஸதுல் பலாஹ் அரபுக் கல்லூரி, காத்தான்குடி
8. முஸ்லிம் மகளிர் அரபுக் கல்லூரி, கல்-எலிய
9. மத்ரஸதுல் ஜிப்ரிய்யா அரபுக் கல்லூரி, காலி
10. ஹியாதியா அரபுக் கல்லூரி, மாதம்பை
11. நத்வத்துல் புஹாரி அரபுக் கல்லூரி, கிண்ணியா
12. மத்ரஸதுல் நூராணியா அரபுக் கல்லூரி, கொட்டுவகொட, மாத்தறை
13. மக்கியா அரபுக் கல்லூரி, காலி

அல்லது

வேறு அங்கீகரிக்கப்பட்ட நிறுவகம் (நேர்முகப் பரீட்சையின் போது அந்த நிறுவனம் அங்கீகரிக் கப்பட்டுள்ளதென்று சான்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.)

III. மேலே (1) மற்றும் (11) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பெற்றிருப்போர் வேறு நியமனம் பெற்றிருப்பினும் அரபுப்பாடநெறிக்கு விண்ணப் பிக்க முடியும்.

(ஔ) விசேட கல்விப் பாடநெறி –

இப்பயிற்சி நெறி மூன்று பிரிவுகளைக் கொண்டது.

1. கட்புலன் குறைந்த (பார்வை) பிள்ளைகளுக்குக் கற்பித்தல்
2. செவிப்புலன்குறைந்த (கேள்வி) பிள்ளைகளுக் குக் கற்பித்தல்
3. உளவாற்றல் குறைந்த (நுண்ணறிவு குறைவு) பிள்ளைகளுக்குக் கற்பித்தல்

**தாம் விரும்பிய பிரிவு எது என்பதை விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும். தெரிவின்போது ஆங்கிலத்தில் தேர்ச்சி உள்ளோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.**

(க) கைப்பணி தொழில்நுட்பத்திறன் பயிற்சி நெறி –

I. க. பொ. த. (சா.த.) பரீட்சையில் அல்லது சிரேஷ்ட பாடசாலைத் தராதரப்பத்திரப் பரீட்சையில் ;

- மரவேலை
- உலோக வேலை
- நெசவு
- மட்பாண்டம்
- மோட்டார் தொழில்நுட்பம்
- வானொலி தொழில்நுட்பம்
- மேசன் வேலை

ஆகிய பாடங்களில் ஒன்றில் திறமைச் சித்தி பெற்றிருத்தல்; அல்லது

II. தே. க. பொ. சா. சான்றிதழ் பரீட்சையில் குறிப்பிட்ட பாடத்தில் "ஏ" அல்லது "பீ" தரச் சித்தி பெற்றிருத்தல் (தொழில் முன்னிலைப் பாடம் எது என்பதை அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் அவசியம்.) ; அல்லது

III. அரச தொழில்நுட்பப் பாடசாலையொன்றில் அல்லது அரச திணைக்களமொன்றின் கீழ் நடத்தப்படும் ஒரு வருடத்துக்குக் குறையாத பயிற்சி நெறியொன்றை திருப்திகரமாகப் பூர்த்தி செய்து பயிற்சிச் சான்றிதழ் பெற்றிருத்தல்.

(கா) வர்த்தகப் பாடநெறி –

I. க. பொ. த. (சா. த.) பரீட்சையில் அல்லது சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் பொருளியல், வர்த்தகம், கணக்கியல், தட்டச்சு, சுருக் கெழுத்து, வர்த்தகமும் நிதியும், ஆகியவைகளில் இரண்டு பாடங்களில் திறமைச்சித்திகள் பெற்றிருத்தல், அல்லது

II. க. பொ. த. (உ. த.) பரீட்சையில் மேற்குறித்த பாடங் கள் இரண்டில் சித்தியடைந்திருத்தல், அல்லது

III. அரசினர் தொழில்நுட்பக் கல்லூரியொன்றில் ஒரு வருட வர்த்தகப் பாடநெறியில் சித்தியடைந்து சான்றிதழ் பெற்றிருத்தல்

(கி) தமிழ் மொழிப் பாட நெறி

I. க. பொ. த. (உ. த.) பரீட்சையில் தமிழ் மொழிப் பாடத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல்.

(கீ) உடற் கல்விப் பாடநெறி

I. தற்போது உடற் கல்விப் பாட ஆசிரியராக நியமனம் பெற்றிருத்தல்

(கு) சமூகவியல் பாடநெறி

(i) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் அல்லது சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் சமூகக்கல்வி பாடத்தில் திறமைச்சித்தி பெற்றிருத்தல், அல்லது

(ii) தே. க. பொ. சா. பரீட்சையில் சமூகக்கல்வி பாடத் தில்"ஏ" அல்லது "பீ" தரத்தில் சித்தி பெற்றிருத்தல், அல்லது

(iii) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் புவியியல், வரலாறு, பொருளியல், அரசியல் ஆகிய பாடங்களில் ஆகக்குறைந்தபட்சம் இரண்டு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்

(கூ) இரண்டாம் மொழி (சிங்களம் / தமிழ்)

பந்தி 7 (1) இல் குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பெற்ற இரண்டாம் மொழி (சிங்களம் / தமிழ்) பாடநெறிக்கு நியமனம் பெற்ற ஆசிரியர்கள் இப்பாடநெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.

08. அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலையொன்றில் அனுமதிக்கப்பட்ட ஆசிரிய குழுவொன்றில் நிரந்தர ஆசிரியராகக் கடமையாற்றும் சாதாரண வகுப்புகளில் வாரத்தில் 20 மணித்தியாலங்கள் கற்பிக்கும் ஆசிரியர்களிடமிருந்து குறிப்பிட்ட ஒரு தொகையினர் பயிற்சிக்காகத் தேர்ந்தெடுக்கப்படுவர்.

இது தொடர்பாகக் கீழ்க் குறிப்பிடப்படும் பாடசாலைகள் தனியார் பாடசாலைகளாகக் கொள்ளப்படும் :-

I. 1951 ஆம் வருடம் கட்டணம் அறவிடும் பாடசாலைகளாக மதிக்கப்பட்ட உதவிபெறும் பாடசாலைகள்.

II. 1960/12/01 ஆந் திகதி கட்டணம் அறவிடாத தனியார் பாடசாலைகளென தீர்மானிக்கப்பட்ட பாடசாலைகள்.

III. கல்வி அமைச்சினால் (பிரதேச / மாகாணக் கல்விப் பணிப்பாளர்களாலல்ல) அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளும் பிரிவேனாக்களும்.

சகல தனியார் பாடசாலைகளிலும் கடமையாற்றும் விண்ணப்பதாரிகள் 2013.12.31 ஆந் திகதியன்று குறைந்த பட்சம்

ஒருவருட காலம் இடைவிடாது சேவையாற்றியிருத்தல் வேண்டும். அவர்களது முதல் நியமனக் கடிதமும், குறிப்பிட்ட ஆசிரியர் அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர் குழுவில் உள்ளவர் என்பதையும் அத்தாட்சிப்படுத்திய ஒரு கடிதமும் உரிய மாகாண / வலயக் கல்விப் பணிப்பாளரிடமிருந்து பெற்று நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பித்தல் வேண்டும்.

பிரிவெனாக்களிலிருந்து விண்ணப்பிக்கும் ஆசிரியர்கள் 2013.12.31 ஆந் திகதியன்று ஆகக் குறைந்தது இரண்டு வருடச் சேவையை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். 1959 பிரிவெனாச் சட்டம் அல்லது 1979 ஆம் ஆண்டின் 64 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட சேவை இதற்காகக் கணக்கிடப்படும்.

தற்போது பிரிவெனாக்களில் கற்பிக்கும் அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர்கள் சிங்களம், விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம், பௌத்த சமயம் ஆகிய பாடநெறிகளுக்கு மாத்திரமே விண்ணப்பிக்கலாம். (நியமனம் பெற்ற பாடத்திற்கே பயிற்சி பெறல் வேண்டும்). 'வித்யாயதன' பிரிவெனாக்களில் கற்பிக்கும் அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர்கள் இதற்கு மேலதிகமாக சங்கீதம், சித்திரம், நடனம், வர்த்தகம், உடற்கல்வி, விவசாயம் ஆகிய பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

சகல அரச அனுமதிக்கப்பட்ட தனியார் பாடசாலை ஆசிரியர்கள் முகாமையாளர்களிடமிருந்தும், பிரிவெனா ஆசிரியர்கள் நிருவாகிகளிடமிருந்தும் பின்வரும் விடயங்கள் தொடர்பாகப் பெற்றுக்கொண்ட சான்றிதழை நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பித்தல் வேண்டும்.

I. பயிற்சிபெறும் காலத்தில் சேவையிலிருந்து ஆசிரியரை விடுவிக்க முடியும் என்பது பற்றியும்,

II. பயிற்சிக் காலத்தின் போது ஆசிரியருக்குச் சம்பளம் வழங்க முடியும் என்பது பற்றியும்,

III. பயிற்சி முடிவில் ஆசிரிய நிருவாக சபையினால் குறிப்பிட்ட ஆசிரியரை மீண்டும் சேவையில் சேர்த்துக் கொள்ள முடியும் என்பது பற்றியும்,

IV. பயிற்சிக்காகத் தெரிவு செய்யப்படும் பிரிவெனா ஆசிரியர்களுக்குப் பதிலாக வேறு ஆசிரியர்கள் கோரப்படுவதில்லை என்பது பற்றியும் அவரது வேலைகளை அனுமதிக்கப்பட்ட ஆசிரிய குழுவினருக்கிடையில் பகிர்ந்து கொடுப்பதாகவும் குறிப்பிடுதல்.

அரச அனுமதிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளில் இருந்தும், பிரிவெனாக்களிலிருந்தும் தெரிவு செய்யப்படும் ஆசிரியர்கள் பயிற்சிக்காகப் பதிவு செய்யப்படுவதற்கு முன்பு "பயிற்சியின் பின்பு அரசாங்க பாடசாலைகளில் தொழில் கோருவதில்லை" என்ற நிபந்தனைப் பத்திரத்தில் ஒப்பமிட வேண்டும்.

அரச அனுமதிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளிலிருந்து தோற்றும் சகல ஆசிரியர்களும் மாகாணக் கல்விப் பணிப்பாளரால் கையொப்பமிடப்பட்ட முதல் நியமனக் கடிதத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும். 18 வயதுக்கு முன் நியமனம் பெற்ற ஆசிரியர்களின் நியமனத் திகதி அவர்களுக்கு 18 வருடம் பூர்த்தியான தினத்திலிருந்தே கணிக்கப்படும். இந்நியமனக் கடிதம் வேறொரு அதிகாரியினால் கையொப்பமிடப்பட்டிருப்பின் அது உரிய மாகாணக் கல்விப் பணிப்பாளரால் கையொப்பமிடப்பட்டு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

09. தெரிவுக்காக விண்ணப்பித்தல்.- I. இந்த வர்த்தமானி அறிக்கையில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய விண்ணப்பதாரியால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து அதன் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

(அ) பயிற்சி நெறியைப் பின்பற்றுவதற்கு எதிர்பார்க்கும் மொழியிலேயே விண்ணப்பித்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பம் 8" X 12" (A4) அளவிலான தாளின் இரு பக்கங்களிலும் தயாரிக்கப்படல் வேண்டும்.

(இ) எந்தக் கூட்டினையும் மாற்றவோ நீக்கவோ முயற்சிக்கக் கூடாது. கோடுகளுக்கிடையில் இடைவெளி இருத்தல் வேண்டும். ஒன்றோடொன்று இணைந்திருக்கும் விதத்தில் தயாரித்தல் கூடாது.

II. விண்ணப்பதாரரால் விண்ணப்பப்படிவம் குறைவின்றியும் சரியாகவும் பூர்த்தி செய்யப்படவேண்டும். பூரணமற்ற விண்ணப்பப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும். கீழ்க் குறிப்பிடப்படும் அம்சங்களின்பால் விண்ணப்பதாரிகளின் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

(அ) சகல விண்ணப்பதாரிகளும் தமது பெயரைத் திணைக்களத்தில் பதிவு செய்துள்ள பிரகாரமே குறிப்பிடுதல் வேண்டும்.

(ஆ) தமது பாடசாலை அதிபர், வலயக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஊடாக விண்ணப்பித்தல் வேண்டும். பாடசாலை அதிபர் ஒருவர் விண்ணப்பிப்பதாயிருந்தால் கோட்ட/வலயக் கல்வி அலுவலக கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஊடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

(இ) வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை கீழ்வரும் மாதிரிக்கேற்ப தயாரிக்கப்பட்ட கடிதவுறைகளில் இட்டு அதன் இடது மேல் மூலையில் "ஆசிரியர் கல்லூரிகளில் ஆசிரியர் கல்விப்பாடநெறிக்கு ஆசிரியர்களைத் தெரிவு செய்தல்-2013/2014" எனக் குறிப்பிட்டு பயிற்சி நெறி, மொழி மூலம் மாவட்டம் என்பனவற்றையும் குறிப்பிட்டு 2014, ஏப்பிறல் 04 ஆந் திகதிக்கு முன்னதாக பதிவுத்தபாலில் "பணிப்பாளர், ஆசிரியர் கல்விப் நிர்வாக பிரிவு, கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல" எனும் முகவரிக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பதல் வேண்டும்.

பதிவஞ்சல்

"ஆசிரியர் கல்லூரிகளில் ஆசிரியர்
கல்விப் பாடநெறியைப் பின்பற்றுவதற்காக
ஆசிரியர்களைத் தெரிவு செய்தல் - 2013/2014"

பாடநெறி : ..............
மொழிமூலம் : ..............
பாடசாலையின் வலயம் : ..............

கல்வி பணிப்பாளர்,
ஆசிரியர் கல்வி நிர்வாகப் பிரிவு
கல்வி அமைச்சு,
'இசுருபாய',
பத்தரமுல்லை.

(ஈ) தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
அத்துடன்,

i. விண்ணப்பம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது.
ii. விண்ணப்பத்தோடு ஆவணங்கள் எவற்றையும் இணைத்து அனுப்புதல் கூடாது.
iii. தகைமைகளைப் பரீட்சிப்பதற்காக நடைபெறும் நேர்முகப் பரீட்சையின் போது சகல சான்றிதழ்களினதும் மூலப் பிரதிகளும், போட்டோ பிரதிகளும் சமர்ப்பிப்பதற்குத் தயாராக இருத்தல் வேண்டும். போட்டோப் பிரதிகள் யாவும் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(உ) "ஆசிரியர் கல்லூரிகளில் ஆசிரியர் கல்விப்பாட நெறிக்கு ஆசிரியர்களைத் தெரிவு செய்தல்-2013/2014" இப்பயிற்சி நெறி தொலைக்கல்வி மூலமோ வார இறுதி பயிற்சி மூலமோ நடைபெற மாட்டாது.

10. வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம் மற்றும் தமிழ் அல்லது ஆங்கில மொழி மூலமான வெளிப்படுத்தல்களில் ஏதாவது தொடர்பின்மை தெரியவரும் பட்சத்தில் சிங்கள மொழி வெளிப்படுத்துகையே அதிகாரபூர்வமானதாயிருக்கும்.

அனுர திசாநாயக்க
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
'இசுருபாய',
பத்தரமுல்லை.
2014, மாச்சு 14.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கல்வி அமைச்சு**

ஆசிரியர் கல்லூரிகளில் ஆசிரிய கல்விப் பாடநெறியைத் தொடர்வதற்காக ஆசிரியர்களைத் தெரிவு செய்தல் - 2013/2014

1. மொழி மூலம் : ☐
2. முதல் நியமனக் கடிதத்திற்கமைவாக பாடசாலையில் கடமையேற்ற திகதி : ☐
3. பாடநெறி : ☐
4. முதல் நியமனத்தின் தன்மை, பாடம் அத்துடன் உங்களுக்கு உரித்தான சேவை/தரம்
   (a) முதல் நியமனத்தின் தன்மை : ☐
   (b) பாடம் : ☐
   (c) உரித்தான சேவை (உரிய இலக்கத்தை எதிரே உள்ள கூட்டில் குறிப்பிடவும்).

   இலங்கை ஆசிரியர் சேவை - 01
   ஆசிரிய உதவியாளர் - 02 ☐ ☐
   வேறு (குறிப்பிடவும்) - 03

   d) தரம் : ☐

5. நீங்கள் தொலைக்கல்வி அல்லது வார இறுதி ஆசிரியர் பயிற்சி பாடநெறியில் பயிற்சி பெற்றும் அதனைப் பூர்த்தி செய்யவில்லையாயின் மட்டும் பின்வரும் விபரங்களைச் சமர்ப்பிக்கவும்

   i. பாடநெறி : ......................................................................
   ii. வருடம் : ..........................................................................
   iii. இறுதிப் பரீட்சையின் பெறுபேறு : ......................................

6. பெயர் முதலெழுத்துக்களுடன் (ஆங்கில பெரிய எழுத்தில். கடைசிப் பெயர் முன்பாகவும் முதலெழுத்து கடைசியாகவும் எழுதவும் (உ-ம் : PERERA, A. B.):
வண./திரு./திருமதி./செல்வி. ...................................................
................................................

7. உபயோகிக்கும் முறைப்படி முதலெழுத்துக்குரிய பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்.)
வண./திரு./திருமதி./செல்வி. ...................................................

8. பால் (ஆண் / பெண்) (பொருத்தமான இலக்கத்தை எதிரிலுள்ள கூட்டினுள் எழுதுக.)
ஆண் - 1 பெண் - 2 ☐

9. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

10. அ) பிறந்த திகதி : ..................................

ஆ) 2013/12/31 ஆந் திகதியன்று வயது
வருடங்கள் : ........... மாதங்கள் : ............ நாட்கள் : ..........

11. தொலைபேசி இல. : வதிவிடம் : ..............................
நடமாடும் : ..............................

12. மின்னஞ்சல் (இருப்பின்) : ....................................................

13. பிரத்தியேக முகவரி (ஆங்கில பெரிய எழுத்தில்) :-
......................................................................................................
......................................................................................................

14. தற்போதைய சேவை நிலையம், முகவரி, மாவட்டம் மற்றும் வலயக் கல்வி அலுவலகம் (ஆங்கில பெரிய எழுத்தில்)

   i. தற்போதைய சேவை நிலையம் : ..........................................
   ii. முகவரி : ..........................................................................
   iii. மாவட்டம் : ......................................................................
   iv. வலயக் கல்வி அலுவலகம் : ................................................
   v. சேவை நிலையத்தின் தன்மை (பொருத்தமான இலக்கத்தை எதிரிலுள்ள சதுரத்தில் எழுதுக.)

   a. அரசாங்கப் பாடசாலை - 01
   b. பெருந்தோட்ட - 02
   c. அரசாங்க அனுமதிபெற்ற பிரிவெனா - 03 ☐
   d. அரசாங்க அனுமதிபெற்ற பாடசாலை - 04
   e. வேறு நிலையம் - 05

15. கல்வித் தகைமைகள் :

i. க. பொ. த. (சா. த.) பரீட்சைப் பெறுபேறுகள்

| | | முதலாம் | இரண்டாம் |
|---|---|---|---|
| | | முறை | முறை |
| | வருடம் | | |
| | சுட்டிலக்கம் | | |
| இலக்கம் | பாடங்கள் | பெற்றுள்ள தரங்கள் | |
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |
| 6. | | | |
| 7. | | | |
| 8. | | | |
| 9. | | | |
| 10. | | | |

ii. க. பொ. த. (உ. த.) பரீட்சைப் பெறுபேறுகள்

| | | முதலாம் | இரண்டாம் |
|---|---|---|---|
| | | முறை | முறை |
| | வருடம் | | |
| | சுட்டிலக்கம் | | |
| இலக்கம் | பாடங்கள் | பெற்றுள்ள தரங்கள் | |
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |

16. சேவை விவரங்கள்

| இலக்கம் | சேவையாற்றிய பாடசாலை | சேவைக் காலம் | கஷ்ட பிரதேசமா /இல்லையா என்ற, விவரம் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |

17. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

i. மேலே குறிப்பிடப்பட்ட தகவல்கள் யாவும் உண்மை யானதும் பிழையற்றதெனவும் உறுதிமொழிகின்றேன். என்னால் வழங்கப்பட்ட தகவல்கள் பிழையெனக் கண்டு பிடிக்கப்படுமிடத்து பயிற்சிநெறிக்குத் தெரிவுசெய்யப்பட மாட்டேன் எனவும், தெரிவுசெய்யப்பட்ட பின், வழங்கப் பட்ட தகவல்கள் பிழையென வெளிப்படும் பட்சத்தில் பாட நெறியிலிருந்து விலக்கப்படுவேன் என்பதையும் அறிவேன்.

ii. தற்போது எந்தவொரு நிறுவனசார் ஆசிரியர் பயிற்சியிலும் நான் பங்குபற்றுவதில்லை என வெளிப்படுத்துகிறேன்.

................................ ................................,
திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்.

18. ***அதிபரின் சிபார்சு.-***

i. தற்போது ஆசிரியர் குழுவிலுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை : ................................
ii. மாணவ எண்ணிக்கை : ................................
iii. விண்ணப்பதாரர் பயிற்சிக்காக விடுவிக்கப்படின் மாணவ எண்ணிக்கைப்படி பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை போதுமானதா? : ................................

மேற்படி விண்ணப்பதாரி எனது பாடசாலையில் ................. .............................................. ஆந் திகதி முதல் ஆசிரியராக/ ஆசிரிய உதவியாளராக சேவையாற்றுகின்றார் எனவும், விண்ணப்பதாரியால் மேலே வழங்கப்பட்ட தகவல்கள் யாவும் சரியானவை எனவும் உறுதி கூறுகின்றேன்.

ஆசிரிய பயிற்சிக்காக வண./திரு./திருமதி./செல்வி ............................................ தெரிவு செய்யப்பட்டால் அவரை விடுவிக்க இணக்கம் தெரிவிக்கின்றேன்.

................................ ................................
திகதி அதிபரின் கையொப்பமும் பதவி முத்திரையும்

19. வண./திரு./திருமதி/செல்வி ............................................ வலயத்திலுள்ள....... . பாடசாலையில் ஆசிரியர் சேவையில்/ ஆசிரிய உதவியாளராக சேவையிலுள்ளார் எனவும்,அவர் .............................................. ஆந் திகதியிடப்பட்ட முதல் நியமனத்திற்கமைய .................................................... ஆந் திகதி கடமையேற்றுள்ளார் என்பதையும், ............................. திகதி முதல் இதுவரை இப்பாடசாலையில் சேவையாற்றுகின்றார் எனவும் இவ்விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் என்னால் பரீட்சிக்கப்பட்டனவென்றும், அவை உண்மையானவை என்றும் உறுதிப்படுத்துகிறேன்.

ஆசிரிய பயிற்சிக்காக வண./திரு./திருமதி./செல்வி ......................................... தெரிவு செய்யப்பட்டால் அதற்காக விடுவிக்க இணக்கம் தெரிவிக்கிறேன்.

................................ ................................
திகதி வலயக் கல்விப் பணிப்பாளரின் கையொப்பமும் பதவி முத்திரையும்

20. வண./திரு./திருமதி/செல்வி ........................................ வலயத்திலுள்ள .................................................... பாடசாலையில் ஆசிரியர் சேவையில்/ ஆசிரிய உதவியாளராக சேவையிலுள்ளார் எனவும், இவ்விண்ணப்பத்தில் குறிப்பிடப் பட்டுள்ள விபரங்கள் என்னால் பரீட்சிக்கப்பட்டனவென்றும், அவை உண்மையானவை என்றும் உறுதிப்படுத்துகிறேன்.

ஆசிரிய பயிற்சிக்காக வண./திரு./திருமதி./செல்வி ............... ........................... தெரிவு செய்யப்பட்டால் அதற்காக விடுவிக்க இணக்கம் தெரிவிக்கிறேன் .........................

................................ ................................
திகதி மாகாண கல்விப் பணிப்பாளரின் கையொப்பமும் பதவி முத்திரையும்

3-364

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.